# DEPOSITION OF WITNESS

(See Rule 42)

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF Fast Track Court (At Magistrate Level )**

**PATTUKKOTTAI**

| | |
|---|---|
| **STC. No.** | **107/2025** |
| **பெயர்: PW-1** | **ரபேக்கா தனஜோதி** |
| **கணவர் பெயர் :** | **சலேத்ஞானராஜ் அந்தோனி** |
| **வயது:** | **52/2026** |
| **ஊர்:** | **க.எண்.174/1, காவல்காடு, அணைக்காடு கிராமம், பட்டுக்கோட்டை** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **ஆசிரியர்** |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17[rd] **day of March 2026**

**<u>ஆரம்பிக்கப்பட்ட நேரம் 04:09</u> pm**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**எதிரி ஆஜர்.**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திருமதி.M.Usha (Assistant) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. எதிரியை பற்றிய முழு விபரங்களும் எனக்கு தெரியும். எதிரி எனக்கு பரிட்ச்சயமான நன்கு தெரிந்த நபர் ஆவார். எதிரி எனக்கு எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால், 20 ஆண்டுகளாக பழக்கம். நான் தற்போது க.எண்.174/1 காவல்காடு,அனைக்காடு கிராமம், பட்டுக்கோட்டை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் 10 வருடங்களாக க.எண்.174/1 காவல்காடு,அனைக்காடு கிராமம், பட்டுக்கோட்டை என்ற முகவரியில் வசித்து வருகிறேன்.

2. எதிரியின் முகவரியானது பட்டுக்கோட்டையா அல்லது முதல்சேரியா என்றால், முதல்சேரி கிராமம் ஆகும். எதிரியானவர் எனக்கு உறவினர் இல்லை என்றால், சரிதான். எதிரியானவர் என்னுடைய சமூதாயத்தை சார்ந்தவர் இல்லை என்றால், சரிதான்.

3. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வட்டார மையம் என்ற இடத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆசிரியராக இருக்கிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.7,000/- ஆகும். நான் அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வட்டார மையம் என்ற இடத்தில் மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ஆசிரியராக இருக்கிறேன் என்பதற்கு இனங்க நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். அதைப்போல் எனக்கு மாத வருமானம் ரூ.7000/- என்பதற்கு நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரிதான்.

4. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால், சத்துனவு கூடத்தில் சமையல் செய்யும் பணிசெய்கிறார். எந்த ஊரில் வேலை செய்கிறார் என்றால், பட்டுக்கோட்டையில் உள்ள நைனாங்குளம் ஆகும்.

5. எனக்கும் எதிரிக்கும் வேலை பார்ப்பதன் அடிப்படையில் எந்த நட்பும் கிடையாது என்று சொன்னால், சரிதான்.

6. எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால், பட்டுக்கோட்டை கிளை Indian Bank -ல் Business Correspondent ஆக இருக்கிறார். அவர் வங்கி வாசல் முன் அமர்ந்து ரேகை பதிவு செய்து பணம் கொடுக்கும் வேலை செய்கிறார் என்றால், சரிதான். எனது கணவர் Indian Bank ஆலோ அல்லது அரசாங்கத்தாலோ பணிக்கு நியமனம் செய்யப்படவில்லை என்று சொன்னால், சரிதான். அதைப்போல் Business Correspondent என்ற வேலையில் இருப்பவர்கள் காசோலை பெற்றுக்கொண்டு பணம் கொடுப்பார்கள் என்று சொன்னால், சரியல்ல.

7. என்னடைய கணவரின் சொந்த ஊர் முதல்சேரி கிராமம் என்றால், சரிதான். எதிரியானவர் என்னுடைய மாமியாரான ஞானசௌந்தரியை பார்க்க முதல்சேரியில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு வருவார் என்று சொன்னால், சரிதான். எதிரியானவர்தான் எனது மாமியாருக்கு பணிவிடை செய்வார் என்று சொன்னால், சரியல்ல. எனது மாமியார் தற்போது எங்கு வசித்துவருகிறார் என்றால், அவர் இறந்துவிட்டார்.

8. நான் என் புகார்மனுவில் 17.11.2025 ஆம் தேதியில் எதிரியானவர் ரூ.2,00,000/- பெற்றுக்கொண்டு அதை ஒரு மாதகாலத்தில் திருப்பி தருவதாக பணம் பெற்றார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். அந்த பணத்தை எதிரியானவர் எங்கு வைத்து கேட்டார் என்றால், முதல்சேரியில் உள்ள எனது மாமியார் வீட்டில் கேட்டார். எதிரி எங்கு வைத்து ரூ.2,00,000/- கேட்டார் என்ற விபரத்தினை நான் என்னுடைய புகார் மனு, நிருபணவாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றில் சொல்லவில்லை என்று சொன்னால், சரிதான். ரூ.2,00,000/- என்பது எனக்கு பெரிய தொகை என்று சொன்னால், சரிதான். நான் எத்தனை பைசா வட்டிக்காக கடன் கொடுத்தேன் என்றால், 2 பைசா வட்டிக்காக ரூ.2,00,000/- கொடுத்தேன். வட்டித்தொகையை பிடித்துக்கொண்டுதான் பணம் கொடுத்தேனா என்றால், இல்லை, பணம் கொடுத்தப்பின் தான் வட்டி பிடித்தேன். ரூ.2,00,000/- த்திற்கு ஒரு மாதத்திற்கு ரூ.4000/- வட்டி என்று சொன்னால், சரிதான். அந்த ரூ.4000/- வட்டியை எதிரியானவர் முதல் தவணையில் கொடுத்தாரா என்றால், இல்லை. நான் எதிரியானவர் முதல் தவணையான ரூ.4000/-த்தை கட்டவில்லை என்பதை அவரிடம் கேட்டேனா என்றால், எதிரி பணிபுரியும்

நைனாங்குளம் பள்ளிக்கு சென்று அசலைதான் கேட்டேன், வட்டியை கேட்கவில்லை. எதிரியானவர் அசலைதான் கொடுக்கவில்லை என்பதால், நான் வட்டியையாவது அன்றைய தினம் கேட்டேனா என்றால், கேட்டேன்.

9. ஒரு மாதக்காலத்தின் தவணையின்படி எதிரியானவர் எனக்கு ரூ.2,04,000/−ரூபாய் அசலையும் வட்டியும் சேர்த்துக்கொடுக்க எனக்கு கடமைப்பட்டவர் என்று சொன்னால், சரிதான்.

10. எதிரியானவர் காசோலைக்கு உண்டான தொகையான ரூ.2,00,000/−த்தை கேட்டு எத்தனை முறை சென்றேன் என்றால், 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நானும், 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நானும் எனது கணவரும் நைனாங்குளத்தில் உள்ள பள்ளியில் சென்று கேட்டோம். நானும் எனது கணவரும் இரண்டாவது மாதத்தவணைக்கு சென்றோம் என்பதால், எதிரியிடம் ரூ.2,08,000/−கேட்டோமா என்றால், இல்லை, அசல் தொகை மட்டும்தான் கேட்டோம். அதன்பின் நானும் என் கணவரும், எதிரிக்கு அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத நான்கு நபர்களை அழைத்துக்கொண்டு எதிரி வேலை பார்க்கும் நைனாங்குளத்தில் உள்ள பள்ளிக்கு சென்று கேட்டோமா என்றால், இல்லை, நானும் என் கணவரும் மட்டும்தான் சென்று கேட்டோம்.

11. 20.12.2024 ஆம் தேதி நான் என் கணவர் மற்றும் இரண்டு நபர்கள் அழைத்துக்கொண்டு எதிரி வேலை பார்க்கும் நைனாங்குளத்தில் உள்ள பள்ளிக்கு சென்று கேட்டு தகராறு செய்ததால் பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்திலும், மான்புமிகு தமிழ்நாடு முதல்வரின் புகார் தனிப்பிரிவிலும், மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகாரும் மற்றும் துணை கண்காணிப்பாளர், பட்டுக்கோட்டை ஆகிய நபர்களிடம் எதிரியானவர் புகார்கொடுத்து பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் என்னை விசாரித்தார்கள் என்று சொன்னால், என்னை விசாரிக்கவில்லை , எனது கணவரைதான் விசாரித்தார்கள். பட்டுக்கோட்டை நகர காவல்நிலையத்தில் எனது கணவரை விசாரித்தபோது யார் அவருடம் சென்றார்கள் என்றால், அனைக்காட்டை சேர்ந்த இரண்டு நபர்கள் சென்றார்கள், நான் காவல்நிலையத்திற்கு வெளியே இருந்தேன். மேற்கண்ட விசாரணையில் வட்டி மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக என் கணவரை விசாரித்ததை நான் தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். அனைக்காட்டை சேர்ந்த இரண்டு நபர்கள் பெயர்கள் ஸ்டீபன்ராஜ் மற்றும் சுரேஷ் என்று சொன்னால், எனக்கு தெரியாது. காவல்நிலைய விசாரணையில் என் கணவரிடம் எதிரிக்கும் எனது கணவருக்கும் பரிவர்த்தனை சம்பந்தமான ஆவணங்களை எடுத்துவர என் கணவரிடம் சொன்னார்கள் என்று சொன்னால், சரிதான். காவல்நிலைய விசாரணையில் என் கணவரிடம் எதிரியின் ஆதார் கார்டு, வங்கி கணக்கு புத்தகம், காசோலை புத்தகம் ஆகியவற்றை எடுத்துவர சொன்னார்களா என்றால், இல்லை, என்னைதான் எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை எடுத்துவர சொன்னார்கள். எதிரி என்னிடம் கொடுத்த காசோலையை காவல்நிலையத்தில் எடுத்து வந்து காண்பித்தேன் என்று சொன்னால், சரிதான். அந்த காசோலையானது எதிரியின் கையொப்பம் மட்டும் இட்ட காசோலை என்று சொன்னால், சரிதான். அந்த காசோலையை வைத்துதான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். காவல்நிலையத்தில் காசோலையை நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ள சொன்னார்கள், என்று சென்னால்

**சரிதான். காவல்நிலையத்தில் சொன்னதன் அடிப்படையில் அந்த வழக்கு காசோலையை பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான்.**

**முடிக்கப்பட்ட நேரம் 04:58 PM**

**(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. மா. விசால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.